Souvenir to mark the Archives Week-1992

# சுவடிகளும் சுவடிகள் கூடத்தின் செயற்பாடுகளும்.

Nalayini Kahapathippillai

பரந்துபட்ட பொதுமக்கள் வட்டத்தின் பதப்பிரயோகத்துள் பெரும்பாலும் இல்லாததும் ஆயினும் தனித்துவமான செயற்பாடுகளையும் நோக்கங்களையும் கொண்டதுமானது இச்சுவடிகளும் சுவடிகள் திணைக்களமும். சுவடிகள் என்ற பதமானது காலத்தையும் பெறுமானத்தையும் தனக்குள் கொண்டது. இது பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் என்ற பதங்களிலிருந்து வேறுபடுகிறது.

இங்கு சுவடிகள் என்பதன் மூலம் விளக்கப்படுவது, அது பதிவேடாகவோ ஆவணமாகவோ இருக்கலாம். அத்தோடு அவை நடைமுறை பாவனையிலிருந்து நின்றவையாகவோ அல்லது விஷேட தேவைகளுக்காக மட்டும் நடைமுறையில் தருவிக்கப்பட்டவையாகவோ இருப்பதுடன் அந்நிறுவனத்திற்கான முக்கியமான விபரங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதுடன் அவை பேணுகையில் வைக்கப்படுவதும் பேணப்படுவதனால் அதன் பெறுமதியை உணர்த்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

சுவடிகள் நிறுவனங்கள் புராதன கிரேக்க நாகர்கங்களுடன் தோற்றம் பெற்றது எனலாம். கி.மு 5,4 ம் நூற்றாண்டுகளில் அதென்ஸ் மக்கள் மிக முக்கியமான ஆவணங்களை கோயில்களில் இறைத்தாயிடம் வைத்து பாதுகாத்தார்கள் என்பதுடன் கையெழுத்துப் பிரதிகளும் ஆவணங்களும் சைப்பிரஸ் சுருள்களாகவும் பேணப்பட்டது.

மேலும் இலக்கியங்களையும் அரசு வளர்ச்சிகளையும் மக்கள் வரலாறுகளையும் அறியக் கூடியதாக இருக்கிறதெனில் அதற்கான காரணம் அந்தப்பேணுகையின் அவசியம்/முறை அங்கே காணப்பட்டிருக்கிறது என்பதே.

அடுத்து என்ன காரணங்களுக்காக பதிவேடுகளை பேணவேண்டும் என்பது அரச முக்கியத்துவத்தினை நடைமுறைத் தேவையில் அபிவிருத்தி செய்தல், இரண்டாவதாக கலாச்சார முக்கியத்துவம். கலாசார மூலங்களில் ஒன்றானதுஇச்சுவடிகள் அவை புத்தகங்கள் கையெழுத்துப் பிரதிகள் அரிய பொக்கிஷங்களாகவோ இருக்கலாம். அவை பொதுமக்களின் சொத்தாக ஆவணங்களாகக் கருதப்படுகிறது. மூன்றாவது தனிநபர் விருப்பங்களில் ஒன்று பிரான்ஸ் மறுமலர்ச்சியாளர்களுக்கு தேசிய சுவடிகள் நிறுவனத்தை தோற்றுவிக்க இக்காரணமே முன்னின்றது. பல்வேறுபட்ட சமூக பொருளாதார அரமியல் உறவுமுறைகளை இப்பதிவேடுகள் மூலமே பேணமுடியும் என்பதனால். நான்காவது காரணம் அலுவலக ரீதியானது. பழைய பதிவேடுகள் கூட அரச செயற்பாட்டுக்கு ஆதாரமாக இருக்கிறது. ஓர் அரசின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் வெளிப்படுத்துவதுடன் நடவடிக்கைகளின் தகவலைத்தரும் மூலகங்களாக செயற்படுகிறது.

திணைக்களத்தின் நடவடிக்கைகள் 1981 ம் ஆண்டின் 30 ம் இலக்கச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1973 ம் ஆண்டின் 48 ம் இலக்க தேசிய சுவடிக்கூட சட்டத்தினாலும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினாலும் அச்சகக் கட்டளைச் சட்டம் (அத்தி 178) அச்சாளர் வெளியிட்டாளர் கட்டளைச் சட்டம ஆகியவற்றாலும் நிருவாகிக்கப்படுவதாகும்.

மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் விஷேட ஜனாதிபதிக்குழுவின் பதிவேடுகளை உள்ளடக்குவதற்காக 1973 ம் ஆண்டின் 48 ம் இலக்க தேசிய சுவடிக்கூடச் சட்டத்தின் பகுதி 2 இல் சில மாற்றங்கள் சட்டவரைஞர் திணைக்களத்தினால் கொண்டவரப்பட்டது. அத்துடன் தனியார் நிறுவனங்களின் கேட்டல் காண்டல் பதிவேடுகளையும் சேர்ப்பதற்கு வேண்டிய விதிகளின் இறுதிவரைவும் தயாரிக்கப்பட்டது.



அரசப்பதிவேடுகளை நிரந்தரமாய் பாதுகாத்து வைத்தற்காக சேர்த்துக் கொள்ளல், அவற்றின் பேணுகை, ஆராய்ச்சியும் வெளியீடும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகப் பதிவேடுகளைக் கிடைக்குமாறு செய்தல் நாட்டில் சகல அச்சிடப்பட்ட விடயங்களுக்குமான பிரதான சட்டரீதியான வைப்பகமாக செவையாற்றுதல் தனியார் வசமுள்ள சாதனங்களின் அளவைகளை மேற்கொள்ளல் என்பன இத்திணைக்களத்தின் பிரதான நோக்கங்களாக அமைகிறது.

இச்சுவடிகள்/கூட திணைக்களம் நூற்றுக்கணக்கான பதிவேட்டுத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. செய்திப் பத்திரகை, வெளியிடுகளைக் கொண்டுள்ளதுடன் முதலாம் தொகுதி1640-1796 வரையிலான காலப்பகுதிக்கான டச்சு நிர்வாகப் பதிவேடுகளையும் எஞ்சியவை 1796-1948 ஆண்டுக்குரிய பிரித்தானியர் காலத்திற்கும் அத்தோடு 1948 முதல் அமைந்த சுதந்திர இலங்கைக்கும் உரியனவுமான தொகுதிகளையும் உள்ளடக்கியதாகும். அரசுப் பதிவேடுகள் தனியார் பதிவேடுகள்நுணுக்கொளிப்படங்கள் முதலிய பேணுகையில் உள்ளன.

சேர்ப்புகள் அதாவது திணைக்களங்கள் நிறுவனங்களிலிருந்து வருவித்துக் கொண்ட பதிவேடுகள் பற்றியது. பதிவேட்டு அளவைகள் பதிவேடுகள் மாற்றப்பட வேண்டியவையா அல்லது அழிக்கப்படவேண்டியவையா என்பது தொடர்பானது. அட்டவணைகள் தேடல் வழிகாட்டல்களை தயாரித்தல், பதிவேட்டு முகாமைப் பயிற்சி, மாநாடுகள், நுணுக்கொளிப்படமெடுத்தல், மீளப் புதுப்பித்தலும் பேணுகையும், படி அமைப்பு, தொழினுட்ப உதவி பயிற்சி ஆகியவற்றை உள்ளநக்கிய தொழினுட்பப் பணிகள், தொழினுட்ப உதவி, சான்றுபடுத்திய சாதனப்படிகள், மன்றில் சமூகம், வெளியீடுகள்,கண்காட்ச்சிகள், விரிவுரைகளும் கருத்தரங்குகளும் கொண்ட சேவைகள் போன்றன சுவடிகள் கூடத்தின் விஷேட செயற்பாடுகளாகும்.

திணைக்கள நூலகமானது சுவடிகள் சம்பந்தமான தொழிற் சார்பணி குறிப்பாக இலங்கை வரலாறு பற்றியதுமான நூல்களைக் கொண்டதுமாகும். அது பொதுமக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டதொன்றல்ல. எனினும் தேடுநர்களுக்கு விண்ணப்பத்தின் பேரில் அவர்களது ஆராய்ச்சிப் பணியில் உதவுவதற்காக நூல்கள் வழங்கப்படுகின்றன. இத்துடன் ஜனாதிபதி சுவடிகள் பகுதியும் கிளை அலுவலகம் கண்டியிலும் இயங்குகிறது. மேலும் அச்சகங்கள் ளியிடுகள் செய்தித்தாள்கள் பதிவு செய்தலும் இணைகிறது.

இங்கு பேணுகையில் இருக்கும் செய்திப்பத்திரிகைகளும் வெளியீடுகளும் எவ்வாறு வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு உதவுகிறது எனப் பார்க்கும்போது

பத்திரிகை சட்டம் (அத்தி 180) ன்படி 1830 லிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகள் சுவடிகள் கூடத்தில் பேணப்பட்டுவருகிறது. 19 ம் நூ/ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதியிலிருந்து தோன்றிய ஆரம்ப காலத் தமிழ்ப் பத்திரிகையான உதயதாரகை ஐ எடுத்துக் கொண்டால்

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தின் முரண்பாட்டு நிலைகளும் அக்காலத்தில் நிலவிய சமூகப் பொருளாதார முறைகளையும் விவரமாக அறியக் கூடியதாக உள்ளது. அப்பத்திரிகையில் வந்த இலங்கை வடதேசம், பிறதேசம், சமாசாரத்திரட்டு இவ்வாறான தலையங்களின் கீழ் விளக்கப்படும் விடயங்கள் சாதாரண செய்தியாக மட்டுமன்றி, வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு காலவரையற்று வழிகாட்டியாக அமைகின்றன. தேடுநர்களுக்கு பத்திரிகைகளின் பகுதிகள் தேவைப்படுமிடத்து பத்திரிகையின் பௌதீக நிலையை தேவையைப் பொறுத்து போட்டோ பிரதியாகவோ அல்லது நுணுக்கொளிப்படம் மூலமோ வழங்கப்படுகிறது.

பதிப்பாளர் வெளியிட்டாளர் சட்டத்தின் படி 1885 லிருந்து வெளிவரும் வெளியீடுகள் தேசிய சுவடிகள் கூடத்தில் பேணப்பட்டு வருகிறது. இவை சட்டரீதியான வைப்புக்களாக இருப்பதனால் சாதாரணமாக வெளியீடுகள் தேடுகைக்கு வழங்கப்படுவதில்லை. ஆயினும் ஒரு தேடுநருக்கு வேறு நூல் நிலையங்களில் அந்த குறிப்பிட்ட வெளியீடு கிடைக்காத போது விஷேட அனுமதியுடன் வழங்கும் வசதி உண்டு.



Department of National Archives Sri Lanka/1992